தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 5-2-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடையாகும் கம்பு மற்றும் கேழ்வரகை இருப்பு வைத்து மார்ச் - ஏப்ரல் மாதங்களில் விற்கலாம்

### கம்பு

2013-14ல் இந்தியாவில் 7.95 மில்லியன் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, 8.79 மில்லியன் டன்கள் கம்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவற்றின் உற்பத்தி திறன் எக்டருக்க 1.19 டன்களாக உள்ளது. இராஜஸ்தான் (41%), உத்திரப்பிரதேசம் (16%), குஜராத் (14%) மற்றும் ஹரியானா (11.5%) ஆகிய மாநிலங்கள் இந்தியாவின் கம்பு உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டில், கம்பு சாகுபடி பரவலாக இரண்டு பருவங்களில் (மே - ஜூன் மற்றும் அக்டோபர் - நவம்பர்) மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக அக்டோபர் - நவம்பர் மாதங்களில் பெய்யும் வடகிழக்கு பருவ மழையின் அளவைப் பொறுத்து அதிக அளவில் கம்பு பயிரிடப்படுகிறது. 2012-13ம் ஆண்டில், தமிழ்நாட்டில் கம்பு 0.46 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 0.57 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவற்றின் உற்பத்தி திறன் எக்டருக்கு 1.31 டன்னாக உள்ளது. விழுப்புரம் மாவட்டம் 11 இலட்சம் டன்கள் கம்பு உற்பத்தியுடன் முதலிடத்தில் உள்ளது. இதனைத் தொடர்ந்து தூத்துக்குடி, கடலூர், வேலூர், திருவண்ணாமலை, மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் கம்பு உற்பத்தி செய்யப்படுகின்றது. 2011-12ம் ஆண்டை விட தமிழ்நாட்டில் கம்பு பரப்பளவு மற்றும் உற்பத்தி, முறையே 7 சதவீதம் மற்றும் 50 சதவீதம் குறைந்துள்ளது.

### கேழ்வரகு

2013-14ல் இந்தியாவில் கேழ்வரகு பயிர் உற்பத்தியானது, 1.38 மில்லியன் எக்டர் பரப்பளவிலிருந்து, 1.88 மில்லியன் டன்களாகும். இதன் உற்பத்தி திறனானது எக்டருக்கு 1.64 டன்களாக உள்ளது. இந்திய நாட்டின் சராசரி கேழ்வரகு உற்பத்தி திறனை விட தமிழ்நாடு அதிக உற்பத்தி திறனான எக்டருக்கு 1.96 டன்களை கொண்டுள்ளது. கேழ்வரகானது, இந்தியாவில் பெரும்பாலும் அதிகளவில் கர்நாடக மாநிலத்தில் பயிரிடப்படுகின்றது. 2012-13ம் ஆண்டில், தமிழ்நாட்டில் கேழ்வரகு 0.70 இலட்சம் எக்டர் அளவில் பயிரிடப்பட்டு, 1.38 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இவற்றின் உற்பத்தி திறன் எக்டருக்கு 1.96 டன்னாக உள்ளது. கிருஷ்ணகிரி (58%), தருமபுரி (15%), வேலூர் (8%), சேலம் (7%) மற்றும் ஈரோடு (7%) ஆகிய

மாவட்டங்கள் சேர்ந்து மொத்த தமிழ்நாடு கேழ்வரகு பரப்பளவு மற்றும் உற்பத்தியில், முறையே 96 சதவீதம் மற்றும் 95 சதவீதம் பங்களிக்கின்றன. இப்பயிரானது, பரவலாக ரபி பருவமான செப்டம்பர் - அக்டோபர் மாதங்களில் சாகுபடி மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், ரபி பருவ மானாவாரி பயிரானது கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களிலும் செப்டம்பர் - அக்டோபர் மாதங்களில் சாகுபடி செய்யப்படுகின்றது. அறுவடையானது டிசம்பர் மாத இறுதியில் தொடங்கி வருடம் முழுவதும் சேமித்து வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.

இச்சூழலில், தமிழக விவசாயிகள் அறுவடை செய்த கம்பு மற்றும் கேழ்வரகை உடனடியாக விற்பதா அல்லது சேமித்து விற்பதா என்பதை தெரிந்து கொள்ள ஆவலாக உள்ளனர். எனவே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் கடந்த 12 வருடங்களாக விழுப்புரம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய கம்பு விலை மற்றும் கடந்த 10 வருடங்களாக திண்டிவனம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலவிய கேழ்வரகு விலையை ஆராய்ந்தது. இதனடிப்படையில், 2015ம் வருடம் மார்ச் - ஏப்ரல் மாதங்களில் கம்பு விலையானது குவிண்டாலுக்கு ரூ.1500 முதல் ரூ.1700 வரைக்கும், கேழ்வரகு விலையானது குவிண்டாலுக்கு ரூ.1800 முதல் ரூ.2000 வரை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, விவசாயிகள் அறுவடையாகும் கம்பு மற்றும் கேழ்வரகினை இருப்பு வைத்து, வருகின்ற மார்ச் - ஏப்ரல் மாதங்களில் விற்பனை செய்யுமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003
தொலைபேசி- 0422-2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

1. பேராசிரியர் மற்றும் தலைவர், பயறுவகைத் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-2450498

2. பேராசிரியர் மற்றும் தலைவர்
சிறுதானியங்கள் துறை,
தாவர இனவிருத்தி மற்றும் மரபியல் மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641003.
தொலைபேசி 0422-2450507.

மக்கள் தொடர்பு அலுவலர்